**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 126/2014**

Deposition of the witness for Prosecution **PW** 10

Name : காளீஸ்வரி
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (25.05.2026)

A1, A2 present, A3 died, A4, A5 are absent, petition filed and allowed

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சீதபற்பநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 13/2013 பிரிவுகள் 498A, 294(b),506(1) r/w 109 IPC and Sec 4 of DP Act ன் படியான வழக்கு செங்கோட்டை காவல் ஆய்வாளர் திரு.முனீஸ்வரன் என்பவர் புலன்விசாரணை செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணையில் இருக்கும்போது இவ்வழக்கு பற்றிய புதிய சங்கதிகள் கிடைக்கப் பெற்றதாலும், மேலும் சங்கதிகள் கிடைக்கும் என்ற காரணத்தினாலும் இவ்வழக்கில் வழக்கினை கூடுதல் விசாரணை செய்ய வேண்டி நீதிமன்றத்தில் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் உத்தரவை பெற்று இந்த வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் சாட்சிகள் தங்கம், வள்ளியம்மாள், மணிகண்டன், சரோஜா, குமார், சங்கர் ஆகியோர்களுக்கு மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் 5.7.2024 ஆம் தேதி இந்த வழக்கில் 1வது எதிரிக்கும், 2வது எதிரிக்கும் பிறந்த குழந்தைகள் ரபிகா, சாகுல் ஹமீது ஆகியோருக்கு படிக்கும் பள்ளியில் ஞானம் மாறவா நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்டீபன் சேவியர் என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து குழந்தைகளுக்கான பள்ளி சான்று

மற்றும் பிறப்பு சான்றிதழ் பெற்றேன். 17.1.2024 ஆம் தேதி இவ்வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு மறைமலைநகர் கல்யாணி முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றதாக தெரிய வந்ததால் அந்த கோவில் பொருளாளர் ராஜமாணிக்கம் என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து திருமணச் சான்று பெற்றேன். அந்த திருமண சான்று **அ.சா.ஆ.9** ஆகும். திருமண சான்றிதழ் வழங்கிய ராஜமாணிக்கம் என்பவர் தற்போது பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் வாய் பேச முடியாமல் இருந்து வருவதாக தெரிய வருவதால் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5..3.2025 ஆம் தேதி இந்த வழக்கில் ஒன்னாவது எதிரி இரண்டாவது எதிரியை திருமணம் செய்தது ஊர்ஜிதம் ஆனதாலும், இந்த வழக்கின் சட்ட பிரிவுகள் 498A, 294(b),506(1) r/w 109 IPC and Sec 4 of DP Act லிருந்து பிரிவுகள் 498A, 494, 294(b),506(1) r/w 109 IPC and Sec 4 of DP Act படி சட்டமாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சாஆ.10** ஆகும். எதிரிகள் மீது கூடுதல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் திருமண சான்றிதழை வழங்கிய ராஜமாணிக்கம் என்பவரை நேரில் சென்று நான் விசாரித்து வாங்கினேனா இல்லை காவல் நிலையத்தில் இருந்து யாரையும் அனுப்பிவிட்டு வாங்கினேனா என்றால் நான்தான் நேரில் சென்று விசாரித்து வாங்கினேன். எனது குற்ற இறுதி அறிக்கையின் படி சின்னத்துரை என்பவரின் அப்பா பெயர் என்ன என்றால் சாமி ஆகும். என்னுடைய வாக்குமூலத்தில் ராஜமாணிக்கம் சின்னத்துரை சார்பாக அவரது அப்பா புதியவன் என்பவர் கையொப்பம் செய்ததாக உள்ளது என்றால் சரிதான். அதேபோல் பைஜு என்பவரது தகப்பனார் ஐயப்பன் என்பவர் கையொப்பம் செய்ததாக துலங்கும் என்றால் சரிதான். உண்மையில் சின்னத்துரையின் அப்பா புதியவன் இல்லை, அதே போல் பைஜு அப்பா ஐயப்பன் இல்லையென்றால் சரிதான். பள்ளிக்கூடத்தில் இருந்து ஒரு சான்றிதழ் வாங்கினேனா? இல்லை இரண்டு சான்றிதழ் வாங்கினேனா? என்றால் இரண்டுசான்றிதழ் தான் வாங்கினேன். முனீஸ்வரன் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்திலும், குற்ற இறுதி அறிக்கையிலும் மனுதாரர் தங்கம் ஒன்னாம் தேதிக்கும், இரண்டாவது எதிரிக்கும்

திருமணம் நடந்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவர்கள் நீதிமன்றத்திலும் திருமணம் நடைபெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான் அவர்களுக்குள் தவறாக உறவு இருப்பதாக சொன்னார்கள்.

4, 5 எதிரிகள் கூடுதல் குற்ற அறிக்கையில் எந்தவித குற்றமும் சொல்லப்படவில்லை என்றால் எதிரிகள் ஒன்னு ரெண்டு சேர்ந்து வாழ்வதற்கு உடந்தையாக இருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் யார், அவர்களது உறவு என்ன என்று எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் காளியம்மாள், கருப்பாயி ஆகியோர் ஒன்னாவது எதிரியின் சகோதரிகள் ஆவார்கள். நான் கடைசியாக தாக்கல் செய்த கூடுதல் குற்ற இறுதி அறிக்கையில் மூன்று முதல் ஐந்து எதிரிகள் மீது குற்றம் புரிந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பே மூணாவது எதிரி சாமி என்பவர் இறந்து விட்டதால் அவருக்கு எதிராக குற்றமில்லை என நீதிமன்றம் abait செய்து விட்டது என்றால் சரிதான். ஆனால் நான் அதையும் தெரியாமல் மூன்று முதல் ஐந்து எதிரிகள் என போட்டிருப்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து இதையெல்லாம் எழுதி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஒன்னு, ரெண்டு எதிரிகளுக்கு திருமணம் நடைபெற்ற இடத்திற்கு போகவே இல்லை, அப்படி ஒரு திருமணம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. அப்படி திருமணம் நடைபெற்று இருந்தால் சாட்சியாக காட்டியுள்ள ராஜமாணிக்கத்தை நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துனீர்களா, ஒருவேளை அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் கூட தற்போது அந்த கோவிலில் யார் நிர்வாகத்தில் உள்ளார்களோ அவர்களை வைத்து அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருக்கலாம் என்றால் சரியல்ல. அந்த கோவிலானது இந்து அறநிலைய துறைக்கு பாத்தியப்பட்டதா இல்லை ஏதாவது போடுமாறு வைத்து நடத்தி வருகிறார்களா என்றால் என்பது தெரியவில்லை. நான் அங்கு போகவில்லை, அதனால் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த கோவிலுக்கு சென்றாலும் அங்கு இந்து அறநிலைத்துறையில் போடுஇருக்கும் என்றால் சரியல்ல. அதே போல் ஒரு திருமணம் நடைபெற்றால் அங்கு அடையாள அட்டை, ஆதார் கார்டு மற்றும் முதல் திருமணத்திற்கான ஆதாரம் ஆகியவற்றை பெற்று அதன் முன் தான் திருமணம் செய்வார்கள் என்றால் எதிரிகள் அதனை தாக்கல் செய்யவில்லை. எதிரிகள் போலியாக

மோசடி செய்து திருமணம் செய்து உள்ளார்கள். ஒன்று, இரண்டு எதிரிகளுக்கு முதல் திருமணம் நடைபெற்றதா என்று சான்று வாங்காமல் திருமணம் ராஜமாணிக்கம் செய்து வைத்திருந்தால் அவர் மீதும் இதச பிரிவு 494 வரும் என்றாலும் அங்கு திருமணத்தின்போது இருந்தவர்கள் அதற்கு உதவியாக இருந்தவர்கள் அனைவர் மீதும் இந்த குற்றம் வரும் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் திருமணமே நடைபெறவில்லை காஞ்சிபுரத்தில் செல்வதற்கு வாரண்ட் எதுவும் வாங்கி சென்றீர்களா இல்லை முன் அனுமதி பெற்று சென்றேனா, இல்லை காஞ்சிபுரம் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்து விட்டு சென்றேனா என்றால் வேறு அலுவல் சம்பந்தமாக செல்லும்போது அந்த நடைமுறை பின்பற்ற தேவையில்லை. நான் வேறு எந்த அலுவலகத்திற்கும் செல்லவில்லை இங்கு இருந்து கொண்டே அந்த காரியங்களை எல்லாம் செய்ததால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள தேதிகள் பள்ளிக்கூடத்தில் வாங்கிய தேதிகள் அனைத்தும் ஒன்றில் ஒன்று முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் இரண்டாவது எதிரியை அழைத்து விசாரணை வாக்குமூலமோ இல்லை ஒப்புதல் வாக்குமூலமோ இதுவரை வாங்கவில்லை என்றால் வாங்கி உள்ளேன். அப்படி வாங்காததனால் இரண்டாவது திருமணம் உண்மை இல்லை என்றால் தெரியல. நான் சொல்வது போல் இரண்டாவது திருமணம் நடைபெறவில்லை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பள்ளியில் ரவிகா பிறப்பு சான்றிதழ் வாங்கி உள்ளேன் அதில் என்ன தேதி போடப்பட்டுள்ளது என்றால் 29.5.2019 தேதி போடப்பட்டுள்ளது. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் குற்ற இறுதி அறிக்கையில் ஒன்னாவது எதிரிக்கும், இரண்டாவது எதிரிக்கும் 19.5.2019 ஆம் தேதி குழந்தை பிறந்துள்ளதாக போட்டு உள்ளேன் என்றால் சரிதான்க . நான்பிறப்பு சான்றிதழ் வழங்கிய மருத்துவர் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் பிறப்பு சான்றிதழ் பள்ளியில் தான் வாங்கினோம். தேதிகள் மாறியிருப்பதால் உண்மை தன்மையை அறிவதற்காக திருநெல்வேலி பதிவாளர் இடம் எந்தவித வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது மாதிரி சொன்ன தேதியில் பள்ளிக்கு செல்லவில்லை தலைமை ஆசிரியரை பார்த்து எந்த சான்றிதழும் வாங்கவில்லை என்றாலும், அதே போல் காஞ்சிபுரத்திற்கு சென்று கோவிலில் எந்த சான்றிதழும் வாங்கவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் இருந்து கொண்டு அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து உள்ளேன் என்றால்

சரியல்ல. அதனால் நான் தற்போது சொல்லி உள்ள குற்றச்சாட்டுகளும், இதற்கு முன்பு சொல்லி உள்ள குற்றச்சாட்டுகளும் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 2011 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யும் வரை எதிரிகளை நான் விசாரிக்கவும் இல்லை என்றாலும் அவர்களிடமிருந்து எந்தவித வாக்குமூலமும் வாங்கவில்லை என்றாலும் பின் யோசனையாக 2024 க்கு பின்பு விசாரணை செய்ததாகவும் அதை வைத்து கூடுதல் குற்ற எளிதரிக்கை தாக்கல் செய்ததாகவும் சொல்வது உண்மை இல்லை என்றாலும், வழக்கினை நிரூபிக்க வேண்டுமெனில் மனுதாரர் தங்கத்தினை நீதிமன்றத்தில் விசாரித்து இருக்க வேண்டும் அவ்வாறு விசாரிக்காதாலும் வழக்கு நிலைக்கத்தக்கதவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.01 14:07:20 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 126/2014**

Deposition of the witness for Prosecution **PW** 9

Name : ஸ்டீபன் சேவியர் ஞானம்
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (25.05.2026)

A1, A2 present, A3 died, A4, A5 are absent, petition filed and allowed

<u>முதல் விசாரணை</u>

நான் கோவிந்தபேரி ஞானம் மறவார் நடுநிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் பள்ளியில் சம்பத்குளத்தை சேர்ந்த பைஜு சின்னத்துரை ஆகியோரின் மகன் சாகுல் ஹமீது எங்கள் பள்ளியில் ஆறாவது வகுப்பு படித்து முடித்துள்ளார். அவரது பள்ளி சேர்க்கை எண். 4621 ஆகும். மேற்படி சின்னத்துரை பைஜு ஆகியோரது மகள் ரவிகா என்பவர் எங்கள் பள்ளியில் தமிழ்வழியில் இரண்டாவது வகுப்பு முடித்து உள்ளார். அவரது பள்ளி சேர்க்கை எண். 4617 ஆகும். ரவிகா என்பவரின் பிறப்பு சான்றிதழில் அவரது பிறந்த தேதி 29.5.2018 ஆகும். ஆனால் எங்கள் பள்ளியில் சேர்க்கும்போது குழந்தையின் பிறந்த தேதி 29.5.2019 அன்று தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சின்னத்துரை பைஜு ஆகியோர் மீது தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருவதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னிடம் குழந்தைகளின் பள்ளி விவரம் சேர்ந்த சான்றிதழ்கள் கேட்டதால் 5.7.2024 ஆம் தேதி அட்டஸ்டேஷன் செய்து கையொப்பம் செய்து வழங்கினேன்.சாகுல் ஹமீது என்ற மாணவனுக்கு வழங்கப்பட்ட பள்ளி வயது சான்றிதழ் **<u>அ.சா.ஆ.5</u>** ஆகும். ரவிகா என்ற மாணவிக்கு வழங்கப்பட்ட பள்ளி விபர சான்று **<u>அ.சா.ஆ.6</u>** ஆகும். பள்ளி சேர்க்கையின் போது பயிற்சி கொடுத்த குழந்தைகளுக்கான பிறப்பு சான்றிதழ் நான் போலீசார் விசாரணையின் போது

கொடுத்தேன். ரவிகா என்பவருடைய பிறப்புச் சான்று **அ.சா.ஆ.7** ஆகும். சாகுல் ஹமீத் என்பவரது பிறப்புச் சான்று **அ.சா.ஆ.8** ஆகும். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எங்களது பள்ளியில் எந்த வகுப்பில் சேர்ந்தார்கள் என்றால் சாகுல் ஹமீது என்ற மாணவன் ஆறாவது வகுப்பிலும், ரவிகா இரண்டாவது வகுப்பிலும் சேர்ந்தார். எங்களது பள்ளியில் குழந்தைகளை கொண்டு வந்து சேர்த்தது பைஜு என்றால் சரிதான். ஒண்ணாவது எதிரி எங்களது பள்ளியில் குழந்தைகளை சேர்ப்பதற்கு வரவில்லை. எங்களிடம் சாகுல்ஹமீதுக்கு ஆறாவது வகுப்பில் சேர்வதற்கு மாற்று சான்றிதழ் கொடுத்தார்கள், ரபிகாவிற்கு கொடுக்கவில்லை ஏற்கனவே படித்த பள்ளியில் இருந்து எமிஸ் மூலமாக வந்தது. மாற்று சான்றிதழில் கொடுக்கப்பட்டுள்ள பிறப்பு தேதியும், சான்றிதழில் நான் சொல்லி உள்ள பிறப்பு தேதியும் சரியாக இருந்ததா என்றால் சாகுல் ஹமீதுக்கு கொடுக்கப்பட்ட தேதி சரியாக இருந்தது. ரபிகாவிற்கு கொடுக்கப்பட்ட தேதி தவறுதலாக இருந்தது முன்னாள் பயின்ற பள்ளியில் தவறுதலாக கொடுத்ததால் அதனை மாற்றுவதற்கு சின்னத்துறை நம்பர் தான் கொடுக்கப்பட்டிருந்தது. அவரிடம் போன் செய்ததற்கு அவர் மாற்ற வரவில்லை. அவர் இந்த சின்னத்துரை தான் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நம்பர் மட்டும் தான் இருந்தது. நம்பர் போகும் போது எடுக்கவில்லை. என்னிடம் வந்து விசாரித்து இதையெல்லாம் வாங்கியது ஒரு பெண் காவலர் தான் வாங்கினார்கள் இதற்கு முன்பு உள்ள முந்தின ஆய்வாளர் வந்தார். அவர் யார் என்ன விவரம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்துலட்சுமி என்ற பெண் காவலர் தான் வந்தார் அவர் நம்பர் எங்களது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது உள்ள ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. 5.7.2024 பள்ளி ரிஜிஸ்டர் கொடுக்கும் போது இந்த சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் பெண் காவலர் தான் வாங்கினார். தற்போது பத்து நாளைக்கு முன்பாக வந்து ஆய்வாளர் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார். ஒருத்தரை தகப்பனார் என்று போடுவதற்கு திருமணம் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான் தாய் சொன்னதை வைத்து தான் நாங்கள் போட்டோம். தற்போது பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் படிக்கிறார்கள். தற்போது வரை சின்னத்துரை எங்களது பள்ளிக்கு பெற்றோர் மீட்டிங்

மற்றும் ஏதேனும் குழந்தைக்காக வந்துள்ளார் என்றால் வரவில்லை தாயார் தான் வந்துள்ளார். என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றாலும், என்னிடம் சொன்னதாக சொன்னதாக சொல்வதெல்லாம் பொய் ஆவணத்தில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.01 14:07:27 +0530

Judicial Magistrate, Shenkottai